**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**OS.No.328/2021 in IA.No. 6/2025**
திருமதி. கலைச்செல்வி (P.W –1) **09.02.2026**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. தாவா சொத்து விவரங்கள் பற்றி எனக்கு தெரியும் என்றால் சரி. தாவா சொத்து யாருடைய அனுபவத்தில் உள்ளது என்றால் வாதிகளின் அனுபவத்தில் உள்ளது. 2,3 வாதிகள் தாவா சொத்தில் உரிமை ஆவணத்துடன் வந்து என்னுடைய கணவரை நேரில் பார்த்த விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் என்னுடைய கணவர் 2014 ஆம் வருடம் சொல்லி தெரியும். என்னுடைய கணவர் இறந்த பிறகு வாதிகள் என்னிடம் வந்து எப்போது தாவா சொத்திற்குரிய அசல் கிரைய ஆவணத்தை பெற்று சென்றார்கள் என்றால் நான் என்னுடைய கணவர் இறந்த பிறகு வருத்தத்தில் இருந்தேன். நிறைய முறை வந்து என்னை சந்திப்பார்கள் என் கணவரிடம் முன் தொகையாகப் பெற்ற தொகையை வேறு யாரிடம் ஆவது அசல் ஆவணத்தை கொடுத்து வாங்கி தருவதாக சொல்லி பெற்று சென்றார்கள்.

2. அதன்பிறகு பணத்தை திருப்பி செலுத்தினார்கள் என்றால் கொரோனா காலம் என்பதால் காலதாமதம் ஏற்பட்டது. நீலம்மாள் இறந்து போனார். அதன் பிறகு தான் அறிவிப்பு வந்தது. அசல் கிரைய ஆவணத்தை பெற்றுச் சென்ற பிறகு என்னுடைய கணவர் செலுத்திய முன் தொகையை வாதிகள் திருப்பி செலுத்த தவறியதை பொறுத்து ஏன் காவல் நிலையத்தில் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருந்தது அதனால் எடுக்கவில்லை. அதன் பிறகும் வாதிகள் மீது நம்பிக்கை இருந்ததா என்றால் ஆமாம். வழக்கறிஞர் அறிவிப்பு வந்த பிறகு தான் விவரங்கள் தெரிந்து கொண்டேன்.

3. 8.8.2013 ஆம் தேதி என்னுடைய கணவர் சாட்சி கையொப்பம் செய்து ரத்து பத்திரம் தயார் செய்து கொடுத்துள்ளார் என்றால் தவறு எனக்கு தெரியாது. முன் தொகையை திருப்பிப் பெற வேண்டி எதிர்வழக்குறையில் வாதுரைத்துள்ளேனா என்றால் இல்லை. அதற்காக மனு தாக்கல் செய்துள்ளேன். தொகையை திருப்பி பெற வேண்டி நான் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் தவறு. பதில் அறிவிப்பு அனுப்பி உள்ளேன். இந்த வழக்கு வரவு செலவு பொறுத்து எனக்கும் நீலாம்பளுக்கும் நேரடியாக வரவு செலவு இல்லை என்றால் சரி. என் கணவர் இறந்த பிறகு நீலாம்பாள் என்னிடம் வந்து பேசினார். என்னுடைய கணவரிடம் அடமானம் வைத்த பிறகு வாதிகள் அந்த தொகையை என் கணவரிடமே திருப்பிச் செலுத்தி விட்டார்கள் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது.

4. கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் பெறப்பட்ட முழு முன்தொகையை வாதிகள் செலுத்தி விட்டதால் எதிர்கோரிக்கை மனுவில் கோரி உள்ளவாறு எனக்கு பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. எதிர் கோர்க்கை முழு தள்ளுபடி செய்யப்பட வேண்டும். வாதி கோரியபடி தாவா தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

ஒம்/—கே.ஆர்.கண்ணன்
கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.